UNITED NATIONS
SRI LANKA

TOGETHER FOR SUSTAINABLE DEVELOPMENT

# ஊடக அறிக்கை

உடனடி வெளியீட்டுக்காக

## ஹனா சிங்கர் (Hanaa Singer) அவர்கள் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளராகவும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) வதிவிடப் பிரதிநிதியாகவும் கடமை ஏற்றுள்ளார்

**கொழும்பு, 07, செப்டம்பர்,2018 -** இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளராகவும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) வதிவிடப் பிரதிநிதியாகவும் கடமையேற்றுள்ள ஹனா சிங்கர் அவர்கள் இலங்கையின் மேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அவர்களுடனான தனது அறிமுக சந்திப்பை அவரது வாசஸ்தலத்தில் புதன்கிழமை அன்று மேற்கொண்டிருந்தார். ஹனா சிங்கர் அவர்கள் மதிப்புக்குரிய வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன அவர்களையும் இவ்வாரத்தில் சந்தித்திருந்தார்.

அதி சிரேஷ்ட ஐநா உத்தியோகத்தரான ஹனா சிங்கர் அவர்கள் இலங்கையில் இயங்கும், 22 வதிவிட மற்றும் வதிவிடமில்லாத ஐநா அமைப்புக்களை உள்ளடக்கிய குழுமத்திற்குத் தலைமை தாங்குவதுடன் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் இலங்கைக்கான பிரதிநிதியாகவும் செயற்படுவார்.

இந் நியமனத்திற்கு முன்பதாக, ஹனா சிங்கர் அவர்கள் உலகளாவிய ரீதியில் ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் (UNICEF) பல்வேறு உயர் முகாமைத்துவப் பதவிநிலைகளை வகித்தார். ஜெனிவாவில் UNICEF இணைப்பிராந்திய பணிப்பாளராகவும், சிரியா, நேபாளம், கசகஸ்தான் மற்றும் அசெர்பைசான் ஆகிய நாடுகளிற்கான UNICEF பிரதிநிதியாகவும் பணியாற்றி இருந்தார். இவர் புருண்டி, ஹெய்டி ஆகிய நாடுகளில் மனிதநேய திட்டங்களை நெறிப்படுத்தியதுடன், எல்லை கடந்த மனிதநேய செயற்பாடுகளை ஆப்கானிஸ்தான், ஈராக் மற்றும் அவை சார்ந்த பிரதேசங்களில் தலைமையேற்று நடத்தினார். இவர் ஐக்கிய நாடுகளுடன் ஏறத்தாழ மூன்று தசாப்த கால அனுபவத்தைக் கொண்டுள்ளார்.

எகிப்திய நாட்டவரான ஹனா சிங்கர் அவர்கள் தனது முதுமாணிப் பட்டத்தினை அரச சமூகவியல் துறையிலும் இளமாணிப் பட்டத்தினை அரசியல் விஞ்ஞானத்துறையிலும் எகிப்திலுள்ள கைரோ அமெரிக்க பல்கலைக்கழகத்தில் பெற்றிருந்தார்.

*இலங்கை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம்:*
*ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்திக் கட்டமைப்பு (UNSDF) 2018 – 2022 இன் பரந்த மூலோபாய நெறிகாட்டலுடனும், ஒருமுகமான வழங்கல்களுடனும், இலங்கை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமானது, எவரையும் கைவிடாமல் பின்னிலையில் உள்ளவர்களையும் சென்றடையும் விதமாக, சமாதானம், நீதி உள்ளடங்கலான சமத்துவமான அபிவிருத்தியை அடைவதில் இலங்கை அரசாங்கத்திற்கு உதவி புரிவதை இலக்காகக் கொண்டுள்ளது.*